## Unofficial Translation

### இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்திற்குமிடையே இந்திய நன்கொடை உதவித்திட்டத்தின் கீழ் 49,000 வீடுகள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்தியக் குடியரசு அரசாங்கமும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கமும் (இனிமேல் 'தரப்பினர்" என அழைக்கப்படுவர்)

இரு நாடுகளுக்குமிடையே பாரம்பரியமாக இருந்துவரும் உளங்கனிந்த நட்புறவின் அடிப்படையில் இருதரப்புக்குமான எதிர்கால அபிவருத்தி முயற்சிகளுக்குப் பங்களிக்குமுகமாக

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளின் விரைவான புனரமைப்பு, மீள் கட்டுமானம் மற்றம் அபிவிருத்தி ஆகியவற்றிற்கான தற்போதைய முயற்சிகளை அங்கீகரித்து

யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்த மக்களின் துரிதமான மற்றும் நீடித்த மீள் குடியேற்றத்திற்கான தேவையை ஏற்றுக் கொண்டு

2010 ஜூன் மாதத்தில் கௌரவ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் இந்திய விஜயத்தின்போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை நினைவில்கொண்டு

2011 நவம்பர் 26ம் திகதி வடமாகாணத்தில் 1000 வீடுகளை அமைப்பதற்கான முன்னோடித்திட்டத்தின் ஆவணப் பரிமாற்றங்களையும் நினைவில் கொண்டு

கீழ்வரும் புரிந்துணர்வை மேற்கொண்டுள்ளனர்.

### பிரிவு 1
### 49,000 வீடுகளுக்கான நன்கொடை உதவி

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (இதன் பின்னர் புஓ என்றழைக்கப்படும்) கட்டமைப்பின் கீழ் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் கீழான 49.000 வீடுகளுக்கான, உதவியுடனான புனர் நிர்மாணம், செப்பனிடல், நேரடி புனர் நிர்மாணம் ஆகியவற்றிற்கு வேண்டிய நன்கொடை உதவியை இந்திய அரசாங்கம் வழங்கும். இந்திய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்காக இந்திய ரூபா 13.19 பில்லியனை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. பிரிவு 2ல் குறிப்பிட்ட குறியிலக்கை அடைவதற்கு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இனங்காணப்பட்ட ஒழுங்கு முறைகளுக்கமைய இரு தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவர்.

### பிரிவு 2
### திட்டத்தின் நோக்கம்

வடக்கு மற்றம் கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர்க்குச் சொந்தமான முழுதாக அல்லது பகுதியாகச் சேதமுற்ற வீடுகளின் புனர் நிர்மாணம் மற்றும் செப்பனிடல் பணிகளுக்கு உதவுவதன் மூலம் அவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்புவதை விரைவு படுத்தலும், பயனாளிகளுக்கும் அவர்களது குடுப்பத்தினருக்கும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதும் தேவைப்படும் நிதி உள்ளீட்டின் மூலம் உள்ளூர்ப் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்தலுமே இந்த 49,000 வீடுகளின் நிர்மாணத்திற்கான தீட்டத்தின் நோக்கமாகும் (இனிமேல் திட்டம் என அழைக்கப்படும்)
இந்த மாகாணங்களிலுள்ள மிகவும் பாதிக்கப்பட்டவர்களான நிலமற்றோர், விதவைகள், வயதானோர் மற்றும் அங்கவீனர், பெற்றோர் ஒருவரை மட்டும் கொண்ட குடும்பம், ஆகியோருக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதும் இந்தத் தீட்டத்தின் நோக்கமாகும்.

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுத் தேவைகளையும் இத்திட்டம் கவனத்தில் எடுக்கும்.

## பிரிவு 3
## திட்டத்தின் வரையறை

இந்த திட்டத்திற்கமைய வீட்டு உரிமையாளர்களான பயனாளிகளை முழுதாக அல்லது பகுதியாகச் சேதமான வீட்டின் செப்பனிடல் பணிகளில் நேரடியாக ஈடுபடுத்தி, முடிக்கப்பட்ட புனர் நிர்மாண வேலைகளுக்கமைய அவர்களுக்கான நன்கொடை உதவிப் பணம் தவணைகளில் அவர்களுடைய வங்கிக் கணக்குக்கு வைப்புச் செய்யப்படும் ( சுய ஊக்குவிப்பு மாதிரி)
பயனாளிகளிற் சிலர் விதவைகளாகவோ, தனியொரு பெண் தலைமையிலான குடும்பமாகவோ, அநாதைகளாகவோ, காணியற்றோராகவோ, அல்லது நிர்மாணப் பணிகளில் தங்களை ஈடுபடுத்த முடியாதவர்களாகவோ இருந்தால், அவர்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான வீடுகளை அமைப்பதற்கு முகவர்கள் அல்லது ஒப்பந்தகாரர் ஈடுபடுத்தப்படுவர்.(முகவர் ஊக்குவிப்பு மாதிரி)
இரு மாதிரிகளின் கீழும் புனர் நிர்மாணம் செய்யப்படும் வீடுகள் 550 சதுர அடி நிலப்பரப்பில் அமைக்கப்பட வேண்டும். பயனாளி தேவைப்பட்ட தகைமைகளைக் கொண்டவராயிருந்தால் செப்பனிடல் வேலைகளுக்காகப் பெரிய நிலப்பரப்பைக் கொண்ட வீடுகளும் ஏற்றுக் கொள்ளப்படலாம்.

## பிரிவு 4
## நிறுவன ஓழுங்குகள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்றம், அபிவிருத்தி, மற்றும் பாதுகாப்பிற்கான ஜனாதிபதியின் செயலணி, ஆகியோரின் ஆலோசனையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அமுலாக்கல் முகவர்களினாலும் (இனிமேல் 'அமு' என அழைக்கப்படுவர்) செயற்றிட்ட முகாமைத்துவ ஆலோசகர்களினாலும் (இனிமேல் செமுஆ என அழைக்கப்படுவர்) முறையே சுய ஊக்குவிப்பு மற்றும் முகவர் ஊக்குவிப்பு மாதிரிகள் அமுல் படுத்தப்படும்.

## பிரிவு 5
## நன்கொடை உதவி விபரங்கள்

சுய ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பின் வளர்ச்சிக்கேற்ப நான்கு தவணைகளில் இலங்கை ரூபா 550,000 நேரடியாகப் பயனாளியின் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யப்படும். முகவர் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 550 சதுர அடியில் முழுதாகப் பூரணப்படுத்தப்பட்ட வீடுகள் உள்ளூர்த் தேவைகளுக்கேற்பவும், ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைபடத்திற்கமையவும் அமைக்கப்படும். இலங்கை அரசாங்கத்தினால் இதற்காக வழங்கப்படும் காணியில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

## பிரிவு 6
## அமுலாக்கச் செயல் முறைகள்

கீழ் வரும் விபரிப்பின்படி இத்திட்டமானது பொதுவாக மூன்று முறைகளில் அமுல்படுத்தப்படும்.

**மாதிரி 1- சுய ஊக்குவிப்பு முறையின் கீழ் புனர் நிர்மாணம்::** வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பெரும்பாலான வீடுகளின் புனர்நிர்மாணம் (கிட்டத்தட்ட 38,000 வீடுகள்) பயனாளி – உரிமையாளர் நிர்மாணப் பணியில் ஈடுபடுவதன் மூலம் செயல் படுத்தப்படும். நிர்மாணப் பணியின் முன்னேற்றம் பற்றிய அமுலாக்க முகாமையாளரின்

அத்தாட்சியின் பேரில் நான்கு கட்டங்களாக பயனாளியின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும்.
பயனாளி வீடு நிர்மாணிக்கப்படும் காணித்துண்டின் மாற்ற இயலாத உரிமையை அத்தாட்சிப்படுத்தும் உறுதியை அல்லது பயனாளியின் காணிக்கான உரிமையை அத்தாட்சிப்படுத்தும் மாவட்ட உத்தியோகத்தரின் கடிதத்தைத் தன் வசம் வைத்துள்ளவராக இருக்கவேண்டும். பயனாளி வீட்டு நிர்மாண வேலைகளில் ஈடுபடுவதோடு தொழிலாளர், மற்றும் தேவையான கட்டிடப் பொருட்கள் ஆகியவற்றையும் ஏற்பாடு செய்யவேண்டும். கிடைக்கப்பெறும் உதவி நன்கொடையுடன் வீட்டை முழுமையாகப் பூர்த்தி செய்வதைப் பயனாளி உறுதிப்படுத்தவேண்டும்

சுய ஊக்குவிப்பு வீட்டு நிர்மாணப் பணிகளில் இந்த மாதிரியுருவின் கீழ் ஈடுபடுத்தப்படும் நம்பிக்கையான முகவர்கள் அமுலாக்க முகவர்களாக இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையுடன் வெளிப்படையான விதிமுறைகளுக்கமைய நியமிக்கப்படுவர். சுய ஊக்குவிப்பு மாதிரியுருவின் கீழ் அமர்த்தப்படும் முகவர்கள் குறைபாடற்ற சான்றுகளுடன் பயனாளிகளின் பட்டியலை சரிபார்த்தல் சமூக மற்றும் வளங்கள் திரட்டல், தொழில் நுட்ப மேற்பார்வை, தொழில் நுட்பத் திறமைப் பயிற்சிப் பங்களிப்பு போன்றவை மூலம் நிர்மாண வேலைகளை இலகுபடுத்தலில் திறமை வாய்ந்தவர்களாகவும் உள்ளூர்ப் பிரதேசம் பற்றிய விழிப்புணர்வு உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**மாதிரி 2 – சுய ஊக்குவிப்பு முறையின் கீழ் வீடுகள் செப்பனிடுதல்:** வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கிட்டத்தட்ட 5,000 செப்பனிடப்பட வேண்டிய வீடுகள் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படும். இவற்றிற்கான கொடுப்பனவுகள், செப்பனிடுதலின் முன்னேற்றம் பற்றிய அமுலாக்க முகவர்களின் அத்தாட்சியின் அடிப்படையில் மூன்று தவணைகளில் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படும்.

**மாதிரி 3 - முகவர் ஊக்குவிப்பு முறையின் கீழ் புனர் நிர்மாணம்:** முகவர்கள் மூலம் புனர்நிர்மாணம் செய்யப்படவிருக்கும் கிட்டத்தட்ட 6,000 வீடுகளில் பெரும்பாலானவை (கிட்டத்தட்ட 4.000 வீடுகள்) மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கானவையாகும். மிகுதியானவை தேவையாயின் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும் காணியில் (கிட்டத்தட்ட 1,000) குறைபாடு உள்ளவர்களுக்காக அமைக்கப்படும். இந்த முறையின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையுடன் பொருத்தமான திட்ட முகாமைத்துவ ஆலோசகர்கள் (திமுஆ) தேர்ந்தெடுக்கப்படலாம். இந்தத் திமுஆ ஒரு திறந்த கேள்விப்பத்திர முறைமை மூலம், தங்களது மேற்பார்வையின் கீழ் நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்கான நிறைவேற்று முகாமையாளர்களைத் தேர்ந்தெடுப்பர்.

## பிரிவு 7
## தொழில் நுட்ப விதிமுறைகளும் நியமங்களும்

வடிவமைப்பு வரையறைகள், தொழில் நுட்ப விதிமுறைகள், வீடுகள் நிர்மாணிப்பதற்கான நியமங்களும் குறிப்பீடுகளும் போன்றவை இருதரப்பினருக்குமிடையேயான பரஸ்பர கலந்தாலோசனை மூலம் தீர்மானிக்கப்படும். பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் நுட்ப நியமம் மற்றும் தரத்திற்கேற்ப இத்திட்டம் அமுலாக்கப்படும்.

## பிரிவு 8
## வீடுகளைப் பகிர்ந்தளித்தல்

இரு தரப்பினருக்குமிடையேயான பரஸ்பர கலந்தாலோசனை மூலம் பல் வேறு வகைப்பட்ட வீடுகளை, மாகாணங்கள், மாவட்டங்கள், கிராமங்கள் போன்றவற்றிற்குச் சரியாகப் பகிர்ந்தளிப்பது பற்றித் தீர்மானிக்கப்படும். சேதமடைந்த வீடுகள், திரும்பி வந்தோர், மற்றும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படையில் கிராமங்களையும் பொருத்தமான இடங்களையும் தேர்நதெடுப்பது பற்றித் தீர்மானிக்கப்படும்.

## பிரிவு 9
## பயனாளிகளை இனங்காணுதல்

பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் போது, வருமானம், பால் நிலை, அங்கவீனத்தின் அளவு, குடும்பத்தின் அளவு, பராயமடையாதோரின் எண்ணிக்கை (அடிப்படை தனித்தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டும்) போன்றவற்றிற்கான அடிப்படை தெளிவாக வகுக்கப்படவேண்டும். புள்ளியிடும் முறையொன்றைப் பிரயோகித்து
கணினி மூலமான தரமுறைப் பட்டியல் ஒன்றைத் தயார் செய்வதன் மூலம் பயனாளிகளை இனங்காண்பதற்கான வழி முறையை அமுலாக்க முகவர்கள் அரசாங்க அதிகாரிகளுடன் சேர்ந்து வகுத்துக் கொள்வர். இவ்வாறு பெறப்பட்ட பயனாளிகளின் வரை பட்டியலொன்று பரந்தளவில் பகிரங்கப் படுத்தப் படுவதோடு அந்தந்தப் பகுதிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும். பிரிவு 11ல் குறிப்பிடப்பட்ட பொறிமுறைக்கமைய ஆட்ஷேபணைகளின் பேரில் விசாரணைகள் நடத்தப்பட்டபின் இறுதியான பட்டியல் தயார் செய்யப்படவேண்டும்.
தகவல் இணையத்தளம் உள்ளிட்ட இரு அரசாங்கங்களின் தகவல் மையங்களின் மூலம், தெரிவுக்கான அடிப்படைக்குப் போதியளவு விளம்பரம் கொடுக்கப்படவேண்டும்.

## பிரிவு 10
## திட்ட மேற்பார்வையும் கண்காணிப்பும்

இத்திட்டத்தின் ஒழுங்கான முன்னேற்றத்தைக் கண்காணித்துத் தேவையான இடை வழித் திருத்தங்களைச் செய்வதற்கான திட்ட வழிகாட்டற் குழுவொன்று அமைக்கப்படும். திட்ட வழிகாட்டற் குழுவுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரும் இணைத் தலைமை தாங்குவர். இதில் இலங்கை அரசின் பிரதிநிதிகளும் உள்ளடங்குவர்

## பிரிவு 11
## குறைகளைக் கையாளும் பொறிமுறை

மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளவும் அவற்றில் கவனம் செலுத்தவும் சமூகத்தலைவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியதான குறைகளைக் கையாளும் பொருத்தமான பொறிமுறை யொன்றை இலங்கை அரசாங்கம் அமைக்கும். இந்தப் பொறிமுறையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகத் திட்ட முகாமைத்துவ ஆலோசகர் மற்றும் அமுலாக்க முகாமையாளர் ஆகியோர் பங்கேற்பர். இவர்கள் தங்கள் கடமைகளை ஆற்றுகையில் பகிரங்க விசாரணைகளையும் நடத்தலாம்.

## பிரிவு 12
## இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கள்

இந்தத்திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கத்தை உறுதிசெய்யும் முகமாக இலங்கை அரசாங்கம் கீழ்க்காணும் பங்களிப்பினையும் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ளும்.

(1) முகவர் ஊக்குவிப்பு மாதிரியின் கீழ், வீடுகள் நிர்மாணிப்பதற்கான காணிகளை இனங்காணுதலும் வழங்குதலும் வடக்கு, கிழக்கு, மத்திய, மற்றும் ஊவா மாகாணங்களில் அனைத்து மாதிரிகளுக்கும்

(11) காணி முகாமைத்துவம், தேவையான தடைகளை நீக்கல், பயனாளிகளை இனங்காணலும், உறுதிசெய்தலும், உள்ளிட்ட திட்டத்திற்குத் தேவையான உதவிகளையும், வசதிகளையும், திட்டம் நிறைவேற்றப்படும் முழுக் காலப்பகுதியின் போதும் முன் கூறப்பட்ட பிரிவுகளுக்கமையத் தகுதியும் அனுபவமும் வாய்ந்த சிவிலியன் உத்தியோகத்தர்களை தேசிய, மாகாண, மாவட்ட, மற்றும் பிரதேச மட்டத்தில் நியமனஞ்செய்தல்.

(111) இத்திட்டத்திற்காக இனங்காணப்பட்ட காணிகள், கண்ணிவெடிகள் அகற்றப்பட்டவை, காடுகள் துப்பரவு செய்யப்பட்டவை மற்றும் பொருத்தமான பாதைகள் உள்ளன என்பவற்றை உறுதிப்படுத்துதல். மற்றும்

உரிய உறுதிப்படுத்தல்களுடன் இந்த இடங்களைக கையளிப்பதற்குப் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்தல்

(iv) இத்திட்டத்தின் கீழ் செப்பனிடுவதற்காக அல்லது புனர் நிர்மாணப் பணிகளுக்காக வழங்கப்படும் காணி கட்டாயக் காணிச் சுவீகரிப்பில் பெற்றுக்கொள்ளப் படாததும், பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றம் செய்யப்படுவது அவர்களது சுய விருப்பத்தின் பேரிலுமே என்பதை உறுதிப்படுத்தல்

(v) சுய ஊக்குவிப்பு முறையில் பயன்பெறும் பயனாளிகள் நிர்மாணிக்கப்படும் வீட்டு நிலத்தின் உரிமையாளர் என்பதை உறுதிப்படுத்தலும் அத்தாட்சிப்படுத்தலும்

(vi) பிரிவு 9ல் குறிப்பிடப்பட்டபடி ஒரு கால அவகாசத்திற்குள் பயனாளிகளை இனங்காணலுக்கும் விசாரணை செய்தலுக்கும் வழி வகை செய்தல்

(vii) இத் திட்டத்தின் கீழ் வரும் எல்லாச் செப்பனிடுதல், நிர்மாணித்தல் ஆகிய பணிகளுக்குமான மண்டலங்களாகப் பிரித்தல், கட்டிட வரைவு, சுகாதார மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்குத் தேவையான தடை நீக்கல்களை சம்பந்தப்பட்ட மாகாண மற்றும் பிரதேச உள்ளூராட்சிச் சபைகளிடமிருந்து பெற்றுக் கொள்ளுவதற்கான ஒழுங்குகளைச் செய்தல்

(viii) காணிப் பதிவுகள் தொலைந்தமை, எல்லைத் தகராறுகள், அரசாங்கக் காணிகளுக்கு உரிமை கோரல் சம்பந்தமாக எழுகின்ற காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தற்போதுள்ள பொறிமுறைகள் போதாதெனக் காணப்படுமிடத்து இதற்காகவென்று அமைக்கப்பட்ட பொருத்தமான பொறிமுறைகள் மூலம் துரிதமாகத் தீர்த்து வைத்தல்

(ix) திட்ட அமுலாக்கக் காலம் முழுவதிலும் தேவையன அளவு கட்டிடப் பொருட்கள் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பெற்றுக் கொள்ளுவதற்கு வசதி செய்தல். சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்கள் தங்கள் பகுதியில் பெற்றுக்கொள்ளக் கூடிய பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்கள் பற்றிய விபரங்களை வழங்குதல்

(x) இந்தத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஈடுபடும் திட்ட முகாமை ஆலோசகர்கள், அமுலாக்கல் முகவர்கள், மற்றம் இதில் சம்பந்தப்பட்ட முகவர்கள் நிறுவனங்கள், குழுக்கள், மற்றும் இந்திய அரசாங்கத்தின் அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோருக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால விசாக்கள் இலவசமாக வழங்கல்.

(xi) இந்தத்திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்படும் எல்லாவித உபகரணங்கள், இயந்திர சாதனங்கள், கருவிகள், கட்டிடப் பொருட்கள், யாவற்றிற்கும் இலங்கை அரசாங்கம். மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றினால் விதிக்கப்படும் எல்லாவித இறக்குமதித் தீர்வைகள், சுங்க வரிகள், ஏனைய வரிகள் ஆகியவற்றிலிருந்து விலக்களித்தல்

(xii) இந்தத்திட்ட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டதும் எல்லாவித உபகரணங்கள், இயந்திர சாதனங்கள், கருவிகள், கட்டிடப் பொருட்கள், யாவற்றையும் திரும்ப ஏற்றுமதி செய்யப்படும் போது இலங்கை அரசாங்கம். மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றினால் விதிக்கப்படும் எல்லாவித ஏற்றுமதித் தீர்வைகள், சுங்க வரிகள், ஏனைய வரிகள் ஆகியவற்றிலிருந்து விலக்களித்தல்

(xiii) இத்திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்படும் கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றிவரும் கப்பல்களுக்குக் கொழும்பு, திருகோணமலை, காங்கேசன்துறை மற்றும் பொருத்தமான ஏனைய துறைமுகங்களில் அவற்றை இறக்கும்போது அவற்றின் விரைவான அகற்றலுக்கு வழி செய்தல்

(xiv) இலங்கையிலுள்ள நிறைவேற்று முகவர்களின் அதிகாரிகள், எந்திரவியலாளர்கள், மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்குத் தேவையான சுய பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து ஆகியவற்றை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(xv) இத்திட்டத்திற்கத் தேவையான அமைவிடக் காரியாலயமொன்றை அமைப்பதற்கும் அங்கு சேவையாற்றுவோர்க்கும் உபகரணங்களுக்குமான தேவைகளை நிறைவு செய்தலும் அவற்றிற்கான தண்ணீர் மற்றம் மின்சாரக் கட்டணங்கள் போன்றவற்றிலிருந்து விலக்களித்தலும்.

(xvi) உள்ளூர் நிர்மாணப் பணியாட்களை இனங்கண்டு அவர்களைச் சேவையிலீடுபடுத்த அவர்களுக்கான பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை விரைவாகப் பெற்றுக்கொடுத்தல்

(xvii) இத்திட்டத்திற்குத் தேவையான சுற்றாடல் மற்றும் ஏனைய அனுமதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

(xviii) இத்திட்டத்தை அமுல் படுத்தும் போது சர்ச்சைகள் எதுவும் ஏற்பட்டால் அவற்றைத் தீர்த்துவைப்பதற்கான விசாரணை மன்றத்தில் பங்குபற்றுவதற்கு வேண்டிய பிரதிநிதிகளை நியமித்தல்.

(xix) குறைபாடுகள் சம்பந்தமான விசாரணைகளைக் கையாளுவதற்கான பொறிமுறையொன்றை மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் ஏற்படுத்தி மேற் கூறப்பட்ட 11ம் பிரிவுக்கமைய குறைபாடு சம்பந்தமான மனுக்களை ஏற்று அவற்றை விசாரித்துத் தீர்த்து வைத்தல்

(xx) இத்திட்டத்தை அமுலாக்குவதற்குத் தேவையான வேலை வாய்ப்பு மற்றும் திறமைசாலிகளின் குறைபாடுகளைக் களைவதற்கான உள்ளூர் திறமை அபிவிருத்தியைக் கட்டியெழுப்பவதற்கான நடவடிக்கைகளையெடுத்தல்

(xxi) சம்பந்தப் பட்டோர்க்குத் திட்டத்தின் நோக்கங்களைத் தெளிவு படுத்தவும் அது சம்பந்தமான பொருட்கள் விநியோகத்தை வசதிப்படுத்தவதற்குமான தகவல் பரப்பு பிரசாரங்களை முன்னெடுக்கத் தேவையான ஒத்துழைப்பை வழங்கல்

பிரிவு 13

**சர்ச்சைகளுக்குத் தீர்வு காணல்**

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விளக்கம் அல்லது பிரயோகத்தின் போது ஏதாவது சர்ச்சை ஏற்பட்டால் அவை இரு தரப்பினரதும் கலந்தாலோசனையின் பேரில் தீர்க்கப்படும்

பிரிவு 14

**திருத்தம் பற்றிய அறிவித்தல்**

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருதரப்பினரதும் பரஸ்பர இணக்கத்தின் பேரில் திருத்தம் செய்யவோ ஏதாவது பிற்சேர்க்கைகளை இணைத்துக் கொள்ளவோ முடியும்

பிரிவு 15

**இரத்துச் செய்தல் பற்றிய அறிவித்தல்**

இந்த ஒப்பந்தமானது கையெழுத்திடப்பட்ட நாளிலிருந்து இந்த ஒப்பந்தத்தை இரத்து செய்யும் நோக்கம் பற்றி ஏதாவொரு தரப்பினர் இராஜதந்திர ரீதியாக ஆறுமாத கால முன்னறிவித்தல் கொடுக்கும் வரை நடைமுறையில் இருக்கும் எனினும் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட அல்லது அரைகுறையாகவுள்ள நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்படும்வரை இந்த ஒப்பந்தம் தொடர்வதோடு இரத்துச் செய்வதற்கான அறிவித்தல் அந்தப் பணிகளில் எந்த விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. இந்த அறிவித்தற் காலம் வரை இரு தரப்பினரும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தங்கள் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றக் கடப்பாடுடையோராவர்

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப் பூரண அதிகாரம் வழங்கப்பட்ட கீழ்வரும் பிரதிநிதிகளால் கைச்சாத்திடப்பட்டது

…………..ம் திகதியன்று கொழும்பில் ஆங்கில மொழியிலான இரண்டு மூலப்பிரதிகளில் கையொப்பமிடப்பட்டது

| | |
|---|---|
| இந்தியக் குடியரசுக்காகவும் அதன் சார்பிலும் | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்காகவும் அதன் சார்பிலும் |
| பதவிப் பெயர் | பதவிப் பெயர் |

(இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வாசகங்கள் சம்பந்தமாக ஏதாவது சர்ச்சைகள் எழுமாயின் அதன் ஆங்கில வாசகமே மேலோங்கும் என்பது கவனிக்கப்படல் வேண்டும்)